மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 10 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 552/22 -ல்**

**அசல் வழக்கு எண். 67/2016**

சேகர் .... மனுதாரர்/ தரப்பினராக சேர்க்கப்படவேண்டியவர்

// எதிர்//

1. தமிழரசன்

2.சிலம்பரசன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

தனலெட்சுமி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செந்தமிழ்செல்வன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரரரை அவசிய தரப்பினர் என்ற வகையில் மனுதாரரரை 3 ம் பிரதிவாதி/தரப்பினராக சேர்த்துக்கொண்(Implead) வழக்கினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 10 விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம் :-</u>**

அசல் வழக்கானது வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 08.12.2022 ம் தேதியன்று பிரதிவாதி தரப்பில் மேலும் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா சொத்து மனுதாரரின் தகப்பனாரான கோவிந்தராசு (எ) கோவிந்தசாமி என்பவர் அனுபவித்து வந்து அவருக்கு பிறகு மனுதாரருக்கு கிடைக்கப்பெற்று அவரால் அனுபவிக்கப்பட்டு வந்து கடந்த 07.05.2015 ம் தேதியன்று 2 ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டு 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. மனுதாரரால் கிரயம் செய்து கொடுக்கப்பட்ட சொத்திலிருந்து பிரதிவாதியை வாதி வெளியேற்றி தாவா சொத்தின் சுவாதீனத்தை வசம் கேட்பது மனுதாரரின் உரிமையை பாதிக்கும் செயலாக உள்ளது. ஆகவே, அசல் வழக்கில் மனுதாரரை அவசிய தரப்பினராக 3 ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

எதிர்மனுதாரர்கள்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வாதிக்கு சொந்தமான இடத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ளதை மீட்டளித்திட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் ஏற்படுத்தியுள்ள மோசடியான பதிவு செய்யப்படாத ஆவணத்தை குறியீடு செய்வதற்காக மனுதாரரை வழக்கில் சேர்க்கவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கோ, தாவா சொத்திற்கோ தாவா சொத்தின் வழக்கு மூலத்திற்கோ எந்த வகையிலும், தொடர்பில்லாத மனுதாரரை வாதி தரப்பில் செய்துள்ள வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற என்ற எண்ணத்தில் மோசடியான பதிவு செய்யப்படாத போலி ஆவணத்தை மூலதனமாக கொண்டு வாதிக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இமமனுவினுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுவினை தள்ளுபடி

செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**தீர்வு :-**

1. மனு, நிரூபண வாக்குமூலம் எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப் படவில்லை.

2. வாதி சுவாதீனம் பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவரது தரப்பில் மேல் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இம்மனுவின் மனுதாரர் இவ்வழக்கில் அவரை தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தகோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

வாதி/எதிர்மனுதாரர் தனது வழக்குரையில் புல எண்.199AB-8-ல் உள்ள பூரா புஞ்சை சாகுபடி நிலம் 0.11.5 ஏர்ஸ(28 செண்ட்) மற்றும் புல எண்.199AB-14-ல் உள்ள பூரா புஞ்சை சாகுபடி நிலம் 0.13.5 ஏர்ஸ்(33 1/3 செண்ட்) தாவா சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட சொத்துக்களை காலம் சென்ற கோவிந்தசாமி என்பவரின் மகன் வேலுச்சாமி அவர்கள் அனுபவித்து வந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளால் வாதிக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.1 ஆக காட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மனுதாரர் காலம் சென்ற கோவிந்தசாமியின் மகன் என்றும் தாவா சொத்தை அவரது தகப்பனாருக்கு பின்பு மனுதாரரால் அனுபவம் செய்யப்பட்டு கடந்த 07.09.2015-ல் 2ம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், மனுதாரருக்குரிய பாகவீதத்தை பொருத்து 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த சொத்திலிருந்து பிரதிவாதியை வெளியேற்ற தாவா சொத்தின் சுவாதீனத்தை வசம் கேட்பது மனுதாரரின் உரிமையை பாதிக்கும் செயலாக உள்ளதாகவும் அதனால் மனுதாரரை இவ்வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்கும்படி இம்மனுவினை தாக்கல்

செய்துள்ளார்.

மனுதாரரால் 2ம் பிரதிவாதிக்கு 07.09.2015-ல் ஏற்படுத்திக்கொடுத்த பதிவு செய்து கொடுத்த கிரய ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தில் சொத்து விபரத்தில் புல எண். 199AB-9B லும் பூரா புஞ்சை சாகுபடி நிலம் 0.09.5 ஏர்ஸ்க்கு 24 செண்ட்டுக்கு 72 குழி என காட்டப்பட்டுள்ளது. மனுதாரரால் 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த சொத்துக்கும், இவ்வழக்கில் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. வாதி தாவாசொத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ள பகுதியின் சுவாதீனம்கோரி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை இவ்வழக்கில் சேர்க்காததால் மனுதாரரின் பாகத்தை பொருத்து எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை.

மனுதாரர் பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் தாவா சொத்தைப்பொருத்து பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்ததாகவும் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் இந்நீதமன்றத்தில் குறியீடுசெய்ய முடியவில்லை என்று கூறியுள்ளார். மனுவுடன் அந்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. 07.09.2015-ல் மனுதாரரால் 2ம்பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த ஒரு ஆவணம் மட்டும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பாக மனுதாரர் மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே அனுபோக பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் பி.சா.ஆ.1 அமைந்துள்ள சொத்தை சர்வேயர் வைத்து அளந்து பார்த்தபோது 3செண்ட் 9 குழி கூடுதலாக இருந்ததால் அதற்குண்டான தொகை ரூ.15,000/-த்தை பெற்றுக்கொண்டு அதற்குண்டான அனுபவத்தை பிரதிவாதியிடம் ஒப்படைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட விடுதலைப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேற்கண்ட சங்கதிகளை பரிசீலித்த வகையில்மனுதாரரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்குண்டான எவ்வித முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலன் கருதி இம்மனுவானது தள்ளுபடி செய்து

உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 23.03.2024) அவையறியப்பகரப்பட்டது.

**(ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முசூபொ).

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

**(ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முசூபொ).